**தமிழ்நாடு தகவல் ஆணையம்**

எண்.2, தியாகராயர் சாலை, (ஆலையம்மன் கோயில் அருகில்), எல்டாம்ஸ் ரோடு சந்திப்பு
தேனாம்பேட்டை, சென்னை - 600 018. தொலைபேசி எண் 24347590

**ஆணை நாள்: 12.09.2019 (முற்பகல்)**

**முன்னிலை**

**திரு ச.செல்வராஜ், எம்.ஏ., பி.எட்.,**
**மாநில தகவல் ஆணையர்**

•••••••••

**வழக்கு எண்.SA 2685/E/2017**

திருமதி A.R.முத்துக்கருப்பாயி ... மேல்முறையீட்டாளர்

Vs.

பொதுத் தகவல் அலுவலர்,
வட்டாட்சியர் அலுவலகம்,
திருச்சி மேற்கு வட்டம்,
திருச்சி மாவட்டம். ... பொது அதிகார அமைப்பு

**பார்வை:-**

| | |
|---|---|
| மனுதாரர் தகவல் பெறும் உரிமைச் சட்டம் பிரிவு 6(1) கீழ் மனு செய்த நாள் | 16.12.2016 |
| முதல் மேல்முறையீட்டு மனு நாள் - பிரிவு 19(1) | 28.02.2017 |
| இரண்டாம் மேல்முறையீட்டு மனு நாள் - பிரிவு 19(3) | 04.04.2017 |

******

**ஆணை**

இன்று (12.09.2019) முற்பகலில் இவ்வாணையத்தில் நடைபெற்ற விசாரணைக்கு மேல்முறையீட்டாளர் திருமதி A.R.முத்துக்கருப்பாயி ஆஜராகவில்லை. பொது அதிகார அமைப்பின் சார்பாக, பொதுத் தகவல் அலுவலர், திருமதி ஆ,கவிதா, தலைமையிடத்துத்

துணை வட்டாட்சியர், வட்டாட்சியர் அலுவலகம், திருச்சி மேற்கு வட்டம், திருச்சி மாவட்டம் ஆஜரானார்.

2. மேல்முறையீட்டாளர் 16.12.2016 தேதியிட்டு தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, பிரிவு 6(1)-ன்கீழ் தாக்கல் செய்துள்ள மனுவில் திருச்சி மாவட்டம், திருச்சி மேற்கு வட்டம், பாண்டமங்கலம் கிராமப் புல எண்.195, 196, 197, 198, 199 ஆகியவற்றிற்கு நில உடைமைப் பதிவு மேம்பாட்டுத் திட்டத்திற்கு முன்பு பராமரிப்பிலிருந்த புலப்பட நகலைத் தகவலாகக் கோரி, பொதுத் தகவல் அலுவலர், உதவி இயக்குநர் அலுவலகம், நில அளவைப் பதிவேடுகள் துறை, திருச்சி என விலாசமிட்டுத் தாக்கல் செய்துள்ளார்.

3. மேல்முறையீட்டாளரின் மனுவானது 20.12.2016 தேதியிட்ட கடிதம் வாயிலாகப் பொதுத் தகவல் அலுவலர், கோட்ட ஆய்வாளர், நில அளவைப் பதிவேடுகள் துறை, திருச்சி அவர்களுக்கு அனுப்பப்பட்டுள்ளது. மேல்முறையீட்டாளருக்கு 20.12.2016 தேதியிட்ட கடிதம் வாயிலாகப் பொதுத் தகவல் அலுவலரால் தகவல் வழங்கப்பட்டுள்ளது. பொதுத் தகவல் அலுவலரால் தான் கோரிய தகவல் வழங்கப்படவில்லையென்றும், தான் கோரிய தகவலை வழங்குமாறும் கோரி மேல்முறையீட்டாளர் 28.02.2017 தேதியிட்ட சட்டப்பிரிவு 19(1)-ன்கீழான முதல் மேல்முறையீட்டு மனுவை மாவட்ட வருவாய் அலுவலர், திருச்சி அவர்களுக்குத் தாக்கல் செய்துள்ளார். அதன் பின்னரும் பொது அதிகார அமைப்பினரால் தான் கோரிய தகவல் முழுமையாக வழங்கப்படவில்லையென்றும், தான் கோரிய தகவலை வழங்க உத்திரவிடுமாறும் கோரி மேல்முறையீட்டாளர் 04.04.2017 தேதியிட்ட சட்டப்பிரிவு 19(3)-ன்கீழான இரண்டாம் மேல்முறையீட்டு மனுவை ஆணையத்திற்குத் தாக்கல் செய்துள்ளார். அவ்விரண்டாம் மேல்முறையீட்டு மனுவின் அடிப்படையில் இவ்வழக்கு இன்று (12.09.2019) விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

4. இன்றைய விசாரணையில் பொது அதிகார அமைப்பின் சார்பாக ஆஜரான பொதுத் தகவல் அலுவலர், மேல்முறையீட்டாளருக்கு 06.09.2019 தேதியிட்ட கடிதம் வாயிலாக மேல்முறையீட்டாளர் கோரிய தகவல் நேரில் வழங்கப்பட்டுள்ளதாகவும், மேல்முறையீட்டாளர் கோரிய தகவலைப் பெற்றுக்கொண்டதாக அவரது கணவர் திரு C.அழகப்பன் என்பவர் கடிதம் அளித்துள்ளதாகவும் தெரிவித்து உரிய ஆவணங்களை ஆணையத்தின் முன்பு தாக்கல் செய்தார். இதனை ஆணையம் பதிவு செய்கிறது.

5. இன்றைய விசாரணையில் மேல்முறையீட்டாளர் ஆஜராகாத நிலையில், பொதுத் தகவல் அலுவலரால் ஆணையத்தின் முன்பு தாக்கல் செய்யப்பட்ட ஆவணங்களைப் பரிசீலனை செய்கையில், மேல்முறையீட்டாளருக்கு 06.09.2019 தேதியிட்ட கடிதம் வாயிலாக அவர் கோரிய தகவல் முழுமையாக வழங்கப்பட்டுள்ளதென்பதும், 07.09.2019 தேதியிட்டு ஆணையத்திற்கு விலாசமிட்டு அளித்துள்ள கடிதம் வாயிலாக மேல்முறையீட்டாளர் கோரிய தகவலைப் பெற்றுக்கொண்டதாகத் தெரிவித்து அவரது கணவர் திரு C.அழகப்பன் என்பவர் கையொப்பமிட்டு அளித்துள்ளதும் தெரிய வருகிறது. இதனை ஆணையம் பதிவு செய்து, இவ்வழக்கில் மேலும் விசாரணை தேவையில்லையென முடிவு செய்து இவ்வழக்கு இத்துடன் முற்றாக்கப்படுகின்றது.

**ஒம்/- ச.செல்வராஜ்**
**மாநில தகவல் ஆணையர்**

**(ஆணையத்தின் ஆணைப்படி)**

**உதவிப் பதிவாளர்**

**வழக்கு எண்.SA 2685/E/2017**

பெறுநர்

**பொது அதிகார அமைப்பு**

பொதுத் தகவல் அலுவலர்,
வட்டாட்சியர் அலுவலகம்,
திருச்சி மேற்கு வட்டம்,
திருச்சி மாவட்டம்.

**மனுதாரர்**

திருமதி A.R.முத்துக்கருப்பாயி,
க.பெ. அழகப்பன்,
A3, சங்கர் பிளாட்,
நெ.46, பட்டவர்த் ரோடு,
திருச்சி - 620 002.

Copy to: Judgement File.
16/09/19